MERRICKVILLE
MERRICKVILLE-WOLFORD
*Jewel of the Rideau*

# மெரிக்வில்

www.merrickville-wolford.ca

இது றிடோ ஏரியின் ஆபரணம் என அழைக்கப்படுகின்றது. துடிதுடிப்பான இச்சமூகத்திலிருக்கும் மிகப்பெரிய மையநிலையம் மெரிக்வில் ஆகும். இது ஒன்ராறியோவில் 19-ம் நூற்றாண்டு காலப்பகுதி தொடக்கம் மிகச் சிறப்பாக ப் பாதுகாக்கப்பட்டு வரும் கிராமங்களிலொன்றாக கருதப்படுகின்றது. செழிப்புச் சமூகத்தினர் இதனை 'கனடாவின் மிக அழகான கிராமம்' என வர்ணித்து வந்துள்ளனர். மரபுரிமை ஸ்தலங்கள் எனப் பிரகடனப்படுத்தப்பட்ட 100 இற்கும் அதிகமான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டிடங்கள் இங்கு இருக்கின்றன. கனடாப் பூங்கா (Parks Canada) அமைப்பினால் இயக்கப்படுகின்ற புளொக்ஹவுஸ் நூதனசாலை (Blockhouse Museum) இங்கு காணப்படுகின்ற தேசிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒரு ஸ்தலமாகும். ஒரு யூனெஸ்கோ (UNESCO) உலக மரபுரிமை ஸ்தலமாக விளங்குகின்ற றிடோகால்வாயின் ஒரு பாகமாகவும் இது உள்ளது.



இதன் கவர்ச்சியான நகர்க்கீழ் மையப்பகுதியில் தனித்தனியான கடைகள், கலை ஸஒடியோக்கள், சிறுகடைகள் மற்றும் உணவு விடுதிகள் நிறைந்திருக்கின்றன. இங்கு வனப்பும் கலையழகுக் கலைஞர் கடைகளும் நிறைந்து இருப்பதால் இதனை மக்கள் தாம் பார்க்க விரும்பும் ஓர் இடமாகக் கருதுகின்றனர். இந்த சமூகத்தில் ஏறக்குறைய 30 கலையழகுக் கலைஞர்கள் பணியாற்றுகின்றனர். பூந்தோட்டப் பிரியர்கள் கொண்டாடும் றிடோ பசும்தரை நடை (Rideau Woodland Ramble) அடங்கலாக இச்சமூகத்தில் பல கொண்டாட்டங்களும் இடம்பெறுகின்றன. வோல்போர்ட் (Wolford) என்ற இடத்தில் பால் பண்ணைகள் நிலப்பகுதியை நிறைத்து நிற்கின்றன. கார்லிஸ் கோனர்ஸ் (Carleys Corners), ஈஸ்ட்டொன்ஸ் கோனர்ஸ் (Eastons Corners), ஹெம்லொக் கோனர்ஸ் (Hemlock Corners), ஜஸ்பர் (Jasper), ஸ்னொடொன்ஸ் கோனர்ஸ் (Snowdons Corners), வேர்ல்ட்போர்ட் நிலையம் (Wolford Centre) மற்றும் வேர்ல்ட்போர்ட் சாப்பல் (Wolford Chapel) என்பனவும் இங்குள்ள ஏனைய சமூகங்கள் ஆகும்.

மொத்தச் சனத்தொகை: 3,067 (Statistics Canada 2016 Census)
ஜனவரி மாதச் சராசரி வெப்பநிலை: -8 $^{o}$C (27 $^{o}$F)
யூலை மாதச் சராசரி வெப்பநிலை: 26 $^{o}$C (70 $^{o}$F)
வருடாந்த சராசரி மழைவீழ்ச்சி: 784 mm மழை, 198 cm பனி
தனியொருவர் வருமானம்: $112,384
சராசரி வீட்டு வருமானம்: $124,641
சராசரித் தொழிலின்மை வீதம்: 5-6 %
உயர் பாடசாலைக் கல்வி பெற்ற வயதுவந்தவர்கள்: 400
கல்லூரி அல்லது பல்கலைக்கழக டிப்புளோமாப் பட்டம் பெற்ற வயதுவந்தவர்கள்: 1,005
2 படுக்கை அறைகள் அடங்கிய அடுக்குமாடி வதிவிடத்தின் சராசரி மாதாந்த வாடகைச் செலவு: $937
சராசரி 3 படுக்கையறை விலகியிருப்பதாக மாளிகை: $315,294




**மேலதிகத் தகவல்கள்:**

Doug Robertson, பிரதான நிருவாக உத்தியோகத்தர் மெரிக்வில்
P.O. Box 340, 317 Brock Street West; Merrickville, Ontario K0G 1N0 Canada
613-269-4791 / cao@merrickville-wolford.ca